DINASUDAR 08 MAY 09

# ஜகத்குரு வாசுதேவர் உங்களுடன் பேசுகிறார்

## எது ஆன்மீகம்?



தெளிவில்லாத நம்பிக்கை பேரழிவை ஏற்படுத்தும். நீங்கள் தெளிவில்லாமல் நம்பிக்கை கொண்டால் எப்போதும் அது உங்களை பேரழிவிற்கு இட்டுச் செல்லும். உங்கள் பார்வை தெளிவில்லாமல் இருந்தால் நீங்கள் நம்பிக்கையான ஒட்டுநராக இருந்தாலும் அது அழிவைத்தான் ஏற்படுத்தும். ஏனெனில் உங்களுக்குத் தேவையானது நம்பிக்கை அல்ல. தெளிவுதான். நீங்கள் தெளிவான பார்வையுடன் இருந்தால், அதாவது ஒவ்வொன்றும் எப்படி உள்ளதோ அப்படியே அதைப் பார்த்தால் இந்த உலகை எளிதாகக் கடந்து செல்ல முடியும். நம்பிக்கையோடு காரியங்கள் செய்ய முடியும்.

தற்போது நீங்கள் நெரிசலான ஒரு தெருவை கடக்க வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். எந்த மதத்தை நீங்கள் சார்ந்திருந்தாலும் ஒவ்வொரு மதத்திலும் அவரவருக்கென்று மந்திரம் வைத்திருக்கின்றனர். எனவே ''மரியே வாழ்க' என்றோ ஜெய் ஸ்ரீராம் என்றோ அல்லது அல்லாஹ் அக்பர் என்றோ கூறிக்கொண்டு ஓடலாம். வாகனங்கள் அதிவேகமாக செல்லும் போது இப்படி மந்திரங்களை சொல்லிக் கொண்டு ஓடினால், ஒரு வேளை எந்த ஆபத்துமில்லாமல் தெருவைக் கடந்து விடலாம். மக்கள் பலமுறை இப்படி தெருவைக் கடந்துவிடுகின்றனர். ஆனால் தொடர்ந்து அப்படியே செய்து கொண்டிருந்தால் ஒரு நாள் பிரச்சனை ஏற்பட்டுவிடும். தெருவிலிருந்து தூக்கியெறியப்படுவீர்கள். தெளிவான பார்வையுடன் சென்றால் தெருவை எளிதாகக் கடந்து செல்லலாம். இதற்கு நம்பிக்கை தேவையில்லை. அதனதன் தன்மையில் பார்த்தால் தெருவைக் கடப்பது எளிது.

பொருள்தன்மையிலிருந்து ஆன்மீகத்திற்கு செல்வதற்கும், ஒரு தெருவைக் கடந்து செல்வதற்கு என்ன தேவையோ அதுதான் தேவைப்படுகிறது. நம்பிகேகையும், மன உறுதியும், கற்பனையும் தேவையில்லை. தெளிவு மட்டுமே தேவை. எனவே இந்தத் தெளிவைக் கொண்டு வருவது எப்படி என்பதுதான் நீங்கள் கவனிக்க வேண்டிய ஒரே கேள்வி.